C.C 13/2018
PW2---ஈஸ்வரன்
Date : 12.10.2022

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. வெளியக்கோட்டை, அருங்கூருக்கும ஐந்து கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். 3 வது எதிரி போஸ் என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். 3 வது எதிரிக்கும் எனக்கும் சுமார் இரண்டு மூன்று வருடங்களாக விரோதம் இருந்து வருகிறது.

2. 1 வது எதிரிக்கும் 2 வது எதிரிக்கும் 2017 ல் திருமணம் நடந்தது. எங்களது நிரந்தர குடியிருப்பு எங்கே என்றால் வெளியக்கோட்டையில் குடியிருக்கிறேன். பட்டுங்குடிக்கு போய் வந்து கொண்டிருக்கிறேன். சாட்சியாக குறிப்பிடப்பட்டிருக்கும் தமிழ்செல்வன் என் உடன் பிறந்தவர் என்றால் சரிதான்.

3. அருங்கூரில் பிள்ளைமார் சமூகத்தை சேர்ந்தவர்கள் பெரும்பாண்மையாக உள்ளார்கள் என்றால் சரிதான். அருங்கூரில் உள்ள மேற்படி சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எனது சொந்தக்காரர் என்றால் சரிதான். 3 ம் எதிரியை தவிற 10 வீடுகள் எங்களுக்கு சொந்தக்காரர் வீடாகும் அதில் சுமார் 55 நபர்கள் இருப்பரார்கள்

4. சுமார் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பாக 3 வது எதிரி வீட்டு விசேஷத்திற்கு நாங்கள் சென்று கலந்து கொண்டோம் என்றால் சரிதான். 2 வது எதிரி பிரியதர்ஷினி 1 வது எதிரியின் உடன்பிறந்த தம்பி அரிஸ்டாடிலின் மனைவி ஆவார்.

5. 1வது எதிரிக்கும் 2வது எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் 2வது எதிரி 1வது எதிரியின் உடன்பிறந்த தம்பி மனைவி ஆவார் என்றும் அவர்களுக்குள் உள்ள உறவுமுறையை தவறாக சொல்லி சாட்சியமளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

6. 3வது எதிரி போஸ் என்னிடம் எனது மகனுக்கும் 2வது எதிரியான அவருடைய மருகமளுக்கும் திருமணம் நடைபெற போவதாக திருமணத்திற்கு முந்திய நாளே கூறிவிட்டார். அவரின் அழைப்பை ஏற்று நாங்கள் திருமணத்திற்கு சென்றோம். திருமணம் சுமார் காலை 09.00 மணியளவில் நடைபெற்றது.

7. நாங்கள் திருமணத்தை பார்த்தோம். 3வது எதிரியிடமோ அல்லது 1வது எதிரியிடமோ முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது 2வது எதிரியை 2வது திருமணம் செய்து கொள்வது தவறு என்று சொன்னீர்களா என்றால் சொன்னேன்.

8. திருமணத்திற்கு சுமார் 10 முதல் 15 நபர்கள் வந்திருந்தார்கள். எனக்கு முதல்நாளே திருமண பற்றி விவரத்தை சொல்லிவில்லை என்றால் புகார்தாரர் அப்போது அருங்கூரில் இருந்தார். அப்போது என்னிடமும், புகார்தாரரிடமும் அலைபேசி வசதி உண்டு என்றால் சரிதான்.

9. செல்லம்மாள் புகார் கொடுக்கும்போது வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் செல்லம்மாள் வெளியக்கோட்டையில் இருந்தபோது திருமணம் பற்றி தகவலை நாங்கள் சொன்னதாக புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு, புகார்தாரர்

அருங்கூரில் தான் இருந்தார்.

10. திருமணம் காலை 09.00 மணியளவில் முடிந்த பிறகு திருமணம் பற்றிய தகவலை நாங்கள் புகார்தாரர் செல்லம்மாளிடம் தெரிவித்தோம் திருமணமாகி 10 நிமிடத்தில் தெரிவித்தோம். திருமணத்திற்கு நானும் உடந்தையாக இருந்த காரணத்தால் திருமணம் பற்றி விவரத்தை திருமணம் நடைபெற்றதை பின்னிட்டு நாங்கள் புகார்தாரரிடம் சொன்னோம் என்றால் சரியல்ல.

11. திருமணத்தில் கலந்து கொண்ட எல்லோருடைய பெயரையும் நான் புகார்தாரரிடம் நான் தெரிவிக்கவில்லை. 2017 ல் திருமணம் நடைபெற்றிருந்தால் அதை பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டம் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

12. அவ்வாறு 1 வது எதிரிக்கும் 2 வது எதிரிக்கும் திருமணம் செய்யப்பட்டிருந்தால் அந்த திருமணம் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. திருமணம் நடைபெற்றதற்கான நிருபிக்க ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

13. 3 வது எதிரியுடன் எங்களுக்குள் சொத்து தகராறு வைத்துக் கொண்டு அவர்கள் மீது வீண்பழியை சுமத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை போலவே 3 வது எதிரியும் புகார்தாரருக்கு தாய்மாமன் உறவுமுறை என்பதனால் அவருக்கு துரோகம் செய்யும் எண்ணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

14. 3வது எதிரி குடும்பத்தின் மீது வீண்பழி சுமத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் என்னுடைய துர்போதனையின்பேரில் புகார்தாரர் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் 2வது எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் திருமணம் நடைபெற்றிருந்தால் அதனை ஐந்து கிலோமீட்டர் துாரத்தில் உள்ள புகார்தாரர் சென்ற தடுத்திருக்க முடியும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.